



# “திராவிட இயக்கப் புத்தகங்களைத் தேடித் தேடிப் படியுங்கள்!”

பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**கழக இளைஞர் அணி சார்பில், நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில், இளம் பேச்சாளர்களுக்கு வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி, திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் 'நூலைப் படி' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை:**

“என் வாழ்நாளில் என் அனுபவத்தில் அடுத்த தலைமுறைக்கு இப்படி ஒரு பயிலரங்கம் நடத்தி, உருவாக்கி தயாரித்த ஒரு கட்சியை, நான் உண்மையாகவே பார்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிக்கு முதலில் என் தலைதாழ்ந்த வணக்கங்கள்.

'நூலைப் படி' என்ற தலைப்பின் அடிப்படையில் ஏன் படிக்க வேண்டும். எவற்றைப் படிக்க வேண்டும். எப்படிப் படிக்க வேண்டும் என்று மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேச விரும்புகிறேன்.

## மெய்யறிவும் பட்டறிவும்

ஏன் படிக்க வேண்டும் என்றால், நாம் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும், பெற்றுக் கொண்ட அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குமான வழிகளில் ஒன்று படித்தல். படித்தல் என்பது, நம் அறிவுப் பெருக்கத்திற்கான வழிகளில் ஒன்று. ஏனென்றால், அறிவு என்பது அடிப்படையில் மூன்று தடங்களில் இருந்து நமக்கு வந்து சேரும். ஒன்று **மெய்யறிவு**. இயற்கையாகவே ஒவ்வொருவருக்கும் இருக்கிற அறிவு. இரண்டாவது **பட்டறிவு**. அனுபவத்தின் மூலம் நாம் பெறுகிற அறிவு. மூன்றாவது **நூல் அறிவு**. நூல்களைப் படிப்பதன் மூலமும் படித்தவர்களின் உரைகளைக் கேட்பதன் மூலமும் நாம் பெற்றுக்கொள்கிற அறிவு.

என்னதான் 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன் உண்மை அறிவே மிகும்' என்று சொல்கிறது திருக்குறள். ஆயிரம் புத்தகங்களைப் படித்தாலும், நம்முடைய இயற்கையான மெய்யறிவுக்குத்தான் முதலிடம். இந்த மெய்யறிவு மனிதர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது என்று கருத வேண்டியதில்லை. விலங்குகள், பறவைகள், செடி கொடிகள் எல்லாவற்றிற்கும் கூட இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பருவத்தில், பல நாடுகளில் இருந்து பறவைகள் வேடந்தாங்கலுக்கு வருகின்றன.

ஆஸ்திரேலியாவிலிருந்து வேடந்தாங்கலுக்கு வரவேண்டும் என்று சொன்னால், அதனுடைய தொலைவு அதனுடைய பாதை இவற்றையெல்லாம் அந்தப் பறவைகள் அறிந்திருக்க வேண்டும். மேலும் கடலின் மீதுதான் அந்தப் பறவைகள் பறந்து வரவேண்டும். எந்த இடத்திலும் ஓய்வெடுத்துக் கொள்வதற்கு மரங்களும் இல்லை; கட்டடங்களும் இல்லை. தொடர்ந்து, அந்தப் பறவைகள் பல மைல்கள் தூரம் பறந்து வருவதற்கேற்ற புரதம், கொழுப்பு நிறைந்த உணவுகளை உட்கொண்டு விடுகின்றன என்று அறிவியலாளர்கள் சொல்கிறார்கள். அந்த அறிவு, நமக்கு வியப்பாக இருக்கிறது. எனவே இயற்கை அறிவு என்பது எல்லா உயிரினங்களுக்கும் இருக்கிறது.

இரண்டாவது **பட்டறிவு**. கடற்கரைக்கு ஒரு குழந்தையைக் கூட்டிக்கொண்டு போனால் அந்தக் குழந்தை நம்மிடத்திலே “ஏன் இந்த அலைகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன?” என்று கேட்கிறது. பெரும்பான்மையான பெரியவர்கள் சொல்லுகின்ற விடை 'ரொம்ப அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசக்கூடாது. வந்தியா, கடலைப் பார்த்துட்டு வீட்டுக்குப் போ' என்பதுதான். காரணம், நமக்கும் விடை தெரியாது என்பதுதான். நான் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆசிரியராகப் பணியாற்றியவன். வகுப்பறையில்கூட மாணவர்கள் கேட்கிற கேள்விகள் சிலவற்றிற்கு விடை தெரியவில்லை என்றால், வெட்கப்படாமல் 'எனக்கு இதற்கான விடை சரியாகத் தெரியவில்லை. அறிந்துகொண்டு வந்து, நாளை சொல்கிறேன்' என்று சொல்லியிருக்கிறேன்.

பட்டறிவு என்பது அனுபவத்தின் மூலம் பெறுகிற அறிவு. ஒரு குழந்தையிடம் 'அந்தப் பாத்திரம் சூடாக இருக்கிறது தொடக்கூடாது' என்று சொன்னால், அந்தக் குழந்தை உடனே கேட்பதில்லை. ஒரே ஒரு முறை தொட்டால், 'சூடான பாத்திரத்தைக் கையால் தொடக்கூடாது' என்ற பட்டறிவு அதன் மூளையில் பதிந்துவிடும்.




பட்டு அறிவதால் அதற்கு **பட்டறிவு** என்று பெயர். அதாவது அனுபவத்தின் மூலம் பெறுகிற அறிவு.

## நூல் அறிவின் அவசியம்

நாம் பேசப்போவது நூல் அறிவு, புத்தகங்களின் மூலம் பெறுகின்ற அறிவு. நான்காவது ஒரு முக்கியமான அறிவும் இருக்கிறது. மெய்யறிவு, பட்டறிவு, நூலறிவு, இந்த மூன்றில் இருந்தும் பெறுகிற அறிவை பகுத்துப் பார்க்கும் **பகுத்தறிவு**.

**'நூலைப் படி, தமிழ் நூலைப் படி, சங்கத்தமிழ் நூலைப் படி, முறைப்படி நூலைப்படி, காலையில் படி, கடும்பகல் படி, மாலை இரவு பொருள்படும்படி, நூலைப் படி. பொய்யில் முக்கால் படி, புரட்டில் கால் படி வையகம் ஏமாறும்படி வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி? எல்லாவற்றுக்கும் கீழான சாதி என்பது, நமக்கு தாழ்ந்தபடி அது நமக்கு தள்ளுபடி'** என்று நமக்கு புரட்சிக்கவிஞர் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

எனவே, ஏன் படிக்க வேண்டும் என்றால், அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பெருக்கிக் கொள்வதற்காகவும் படிக்க வேண்டும். அப்படிப் படிக்கிறபோதுதான் நம்மால் உலகத்தின் பல

> **“நீங்கள் எல்லாம் அறிவாளிகளாக ஆகவேண்டும் என்பதை விட, முதலில் அடிப்படையில் உணர்வாளர்களாக ஆக வேண்டும். அதுவும் திராவிட இயக்க உணர்வாளர்களாக வேண்டும்.”**

செய்திகளை அறிய முடியும். காரணம் எல்லாவற்றையும் நம் மெய்யறிவால் பெற்றுவிட முடியாது. எல்லாவற்றையும் நம் அனுபவத்தினால் மட்டும் பெற்றுவிட முடியாது. பலவற்றை நூல்களின் மூலம்தான் கற்று அறிய முடியும்.

எந்த நூலகத்திற்குள் போனாலும், நம் அறியாமை புரியும். ஏனெனில், நாம் படித்த நூல்களைவிட, படிக்காத நூல்களே எல்லா நூலகங்களிலும் அதிகம். அப்படியும் நம்மைப் 'படித்தவர்கள்' என்று மற்றவர்கள் ஏன் சொல்கிறார்கள் என்றால், நாம் படித்த குறைவான புத்தகங்களைக்கூட அவர்கள் படிக்காமல் இருப்பதால்தான் நம்மைப் 'படித்தவர்கள்' என்று கருதுகிறார்கள். எல்லாப் புத்தகங்களையும் நம்மால் படிக்க முடியாது என்பதால், நாம் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

## திராவிட இயக்க நூல்கள்

நீங்கள் இப்போது திராவிட இயக்கத்துக்குள் வந்துவிட்டீர்கள். திராவிட இயக்கம் என்பது சமத்துவத்தை, சமூக நீதியை இந்த மண்ணில் கொண்டு வருவதற்காகப் பாடுபட்ட இயக்கம். எனவே, நீங்கள் படிக்க வேண்டிய புத்தகங்களை இரண்டு விதமாகப் பிரித்துக் கொள்ளுங்கள். திராவிட இயக்கம் தொடர்பான நூல்கள் மற்றும் பிற துறை சார்ந்த நூல்கள்.

திராவிட இயக்கம் தொடர்பான நூல்கள் என்னும்போது, முதலில் திராவிட இயக்க வரலாறு தொடர்பான நூல்களைப் படிக்க வேண்டும். அடுத்தது, திராவிட இயக்கக் கோட்பாடு தொடர்பான நூல்களைப் படிக்க வேண்டும். இவை இரண்டும்தான் அடிப்படை. திராவிட இயக்க வரலாறு என்பது 1912-இல் உருவாக்கப்பட்ட திராவிட சங்கத்திலிருந்து தொடங்குகிறது. இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி, 'நீதிக்கட்சி வரலாறு' என்ற நூல் இரண்டு தொகுதிகளாக வந்திருக்கின்றன. இரண்டு தொகுதிகளையும் எழுதியிருப்பவர் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள். இந்த நூலை, நீங்கள் கண்டிப்பாகப் படிக்கவேண்டும். அதேபோல் முரசொலி மாறன் அவர்கள் எழுதியிருக்கும் **'திராவிட இயக்க வரலாறு'** நூலையும் படிக்கவேண்டும். இப்போது சமீபத்தில் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் **'சுயமரியாதை இயக்க வரலாறு'** என்ற இரண்டு தொகுதிகளும் முக்கியமானவை.

டி.எம்.பார்த்தசாரதி **'தி.மு.க. வரலாறு'** என்று ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார். திராவிடர் கழகத்தின் சார்பில் **'திராவிடர் கழகத்தின் வரலாறு'** இரண்டு தொகுதிகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தப் புத்தகங்கள் எல்லாம் உங்கள் வீட்டில் நிச்சயம் இருக்க வேண்டிய புத்தகங்கள்.

## மாநில சுயாட்சி

சமூக நீதியைப் போலவே நம்முடைய அடிப்படையான அரசியல் கோட்பாடு மாநில சுயாட்சி. சமூக நீதி தொடர்பான, மாநில சுயாட்சி தொடர்பான புத்தகங்களை நீங்கள் படித்தாக வேண்டும். நம்பி ஆரூரன் அவர்கள் எழுதியிருக்கிற 'தமிழ் மறுமலர்ச்சியும் திராவிட தேசியமும்' என்னும் நூல் அவருடைய முனைவர் பட்ட ஆய்வேடு. ஆங்கிலத்தில் உள்ள அந்த நூல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியிருக்கிறது.

சமூகநீதி, இட ஒதுக்கீடு குறித்து, ஆசிரியர் கி.வீரமணி, ஐயா வே.ஆனைமுத்து எழுதியுள்ள



நூல்கள் எல்லாம் நீங்கள் அவசியம் படிக்க வேண்டியவை. மாநில சுயாட்சி பற்றி அறிந்துகொள்ள, நீங்கள் படிக்க வேண்டிய இரு முக்கியமான நூல்கள், முரசொலி மாறன் அவர்கள் எழுதிய 'மாநில சுயாட்சி' மற்றும் வழக்கறிஞர் கு.சா.ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள 'மலர்க மாநில சுயாட்சி' நூல்.

1963-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்குழுவிலே முதன்முதலாக எழுதி வைத்துப் படித்தார். அண்ணாவுக்கு எழுதி வைத்துப் பேசும் பழக்கமே இல்லை. எந்தக் கூட்டத்திலும் எவ்வளவு நேரம் மேடையில் நின்றாலும், பேசிக்கொண்டே இருக்கிற பேராற்றல் உடையவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்படிப்பட்ட அண்ணா அவர்கள் முதன்முதலாக எழுதி வைத்து உரையாற்றினார். அந்த எழுதி வைத்த உரையை தலைவர் கலைஞரிடம் கொடுத்தார். 40 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் புத்தகம் 'எண்ணித் துணிக கருமம்' என்ற தலைப்பில் வெளிவந்திருக்கிறது. திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டபிறகு, மாநில சுயாட்சிக் கோரிக்கையை நோக்கி, நகர்ந்ததைப் பற்றிய புத்தகம் அது. அண்ணாவின் அந்தப் புத்தகம் மிக மிக முக்கியமான புத்தகம். அதேபோல் பேராசிரியர் அ.ராமசாமி அவர்கள் எழுதியிருக்கிற அண்ணாவின் மொழிக் கொள்கை மற்றும் **'இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு'** நூல்களைப் படிக்கிறபோது தான் நாம் உணர்வு பெறுவோம்.

## உணர்வு பெறுங்கள்

நீங்கள் எல்லாம் அறிவாளிகளாக ஆகவேண்டும் என்பதை விட, முதலில் அடிப்படையில் உணர்வாளர்களாக ஆக வேண்டும். அதுவும் திராவிட இயக்க உணர்வாளர்களாக வேண்டும். பல போராட்டங்களைக் கண்ணுக்கு எதிராகப் பார்த்தவன் என்கிற அடிப்படையில் சொல்லுகிறேன். 1965-இல் நடைபெற்ற மொழிப்போரைப் போன்ற எழுச்சிமிக்கப் போராட்டத்தை நான் பார்த்ததேயில்லை. அப்போது, நான் பள்ளிக்கூட மாணவன். மொழிப்போர்த் தியாகிகள் இறந்து போன செய்தி ஒவ்வொரு நாளும் வரும். தங்களைத் தாங்களே எரித்துக்கொண்டு இறந்து போனார்கள் அவர்கள். உலகத்திலேயே மொழிக்காகத் தங்களை எரித்துக் கொண்டு இறந்து போன இளைஞர்கள் இந்த மண்ணிலேதான் உண்டு. எல்லோருமே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், இன்றைக்கு அதைக்கூட மறைத்து 'யாரோ சில மாணவர்கள் போராடினார்கள்' என்று வரலாறு எழுதக்கூடிய முயற்சிகள் நடக்கின்றன. அதை முறியடிக்க வேண்டுமானால் உண்மையான வரலாற்று நூல்களைத் தேடிப்படிக்க வேண்டும்.

## எப்படி படிப்பது?

நாம் எந்தத் துறைக்கு வந்து இருக்கிறோமோ அந்தத் துறை சார்ந்த நூல்களைத் தாண்டி பொது அறிவும் முதன்மையானது. பிற துறைகளிலும் நமக்கு குறைந்தபட்ச அறிவு இருந்தாக வேண்டும். அதுவும் அரசியலிலும் ஊடகத் துறையிலும் இருக்கிறவர்களுக்கு எல்லாச் செய்திகளும் கொஞ்சமாவது தெரிந்திருக்க வேண்டும். நான் மேடையில் இருக்கிறேன். சூயஸ் கால்வாய் பற்றி ஒரு பேச்சு வருகிறது. ஓர் இளைஞர் எழுந்து அதைப் பற்றிக் கேட்கிறார் என்றால் 'அதெல்லாம் எனக்கு தெரியாதுங்க' என்று நான் சொல்ல முடியாது. எனக்குக் கொஞ்சமாவது அதைப்பற்றி தெரிந்திருக்க வேண்டும். எனவே திராவிட இயக்க வரலாறு குறித்த நூல்கள், திராவிட இயக்கக் கோட்பாடு குறித்த நூல்கள் இவற்றுடன் பிற துறை சார்ந்த புத்தகங்களையும் நீங்கள் படிக்கவேண்டும். எல்லாத்துறைகளிலும் குறைந்தபட்ச அறிவை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

எப்படிப் படிப்பது என்பது முக்கியம். ஆயிரம் பக்கங்கள் கொண்ட புத்தகம் என்றால், உங்கள் வசதிக்கேற்றபடி தினமும் இத்தனை பக்கங்கள் என்று தீர்மானித்து, நிச்சயம் படியுங்கள். விரைவில், அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிடலாம். அதேபோல் புத்தகங்களை மெதுவாகப் படிக்கக்கூடாது. விரைந்து படிக்கவேண்டும். 'விரைந்து படிக்கும் முறையே சிறந்தது' என்று இன்றைய அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். விரைந்து படிக்கும்போது நம் கவனம் சிதற வாய்ப்பில்லை.

விரைந்து படியுங்கள். படிப்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நினைவில் வைத்துக் கொள்வதை உரிய இடத்தில் வெளிப்படுத்துங்கள். இது மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சங்கிலித்தொடர். எல்லாவற்றைப் பற்றியும் விரிவாகப் படியுங்கள். தொடர்ந்து படியுங்கள். விரைந்து படியுங்கள்”.